பக்கங்கள் 14+5

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## யாழில் மோதல்! 22 பேர் காயம்!!

### வைத்தியசாலையிலும் பதற்றம்

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் இரண்டு வன்முறைக் கும்பல்களுக் கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் 22 பேர் 04▸

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 20 செவ்வாய்க்கிழமை 02.04.2024 அதிர்வு 246






## இல்ல அலங்கார விவகாரம்:

# பாடசாலை சமூகத்தை அச்சுறுத்தும் பொலிஸ்: மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அச்சுறுத்துவதும் விசாரணைக்கு உட்படுத்துவதும் மனித உரிமை மீறல் எனச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடும் செய்துள்ளது.

மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் இன்று காலை இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். 04▸




04▸

# வடக்கில் நாளை முதல் 41 பாகை செல்சியஸ் வெப்பம்!



## மக்களுக்கு எச்சரிக்கை

நாளை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் வெப்பநிலை மேலும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும், கரையோரப் பகுதிகளில் ஓரளவு வெப்பம் குறைவாகக் காணப்பட்டாலும் உள்நிலப் பகுதிகளில் வெப்பநிலை மிக உயர்வாகக் காணப்படும் என்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா அறிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 04▸




# யாழ். போதனாவில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

நாடளாவிய ரீதியில் 72 சுகாதாரத் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இன்று தமது சேவையில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதற்கு ஆதரவாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதாரத் தொழிற்சங்கத்தினர், காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையில் சேவையில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேற்று இடம்பெறவிருந்த கலந்துரையாடலுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் இன்று நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டோம் என்று சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சானக தர்மவிக்கிரம தெரிவித்தார்.









# கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்துக்கு நிதியும் இல்லை, அபிவிருத்தியும் இல்லை!

## திட்டமிட்ட புறக்கணிப்பு என்று நாடாளுமன்றில் முழங்கிய கலையரசன் எம்.பி.



( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எவ்வித நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை, அபிவிருத்திக் கூட்டமும் நடைபெறவில்லை. இது ஒரு பாரிய புறக்கணிப்பு.பொது நிர்வாக அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள் நேரடியாக கல்முனைக்கு விஜயம் செய்து தீர்வைத் தரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் தமிழர்களுக்கு உரிமை சார்ந்த தீர்வுமில்லை. கல்முனை வடக்கு விடயத்திலும் தீர்வு மில்லை. இன்னுமொரு பிரதேச செயலகத்தின் கீழ் அடிமைகளாக இருந்து செயற்பட வேண்டிய நிலையில் அதிகாரிகள்.

பொது நிர்வாக அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள் நேரடி விஜயம் செய்து இந்த நாட்டில் திட்டமிட்டு ஒரு பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளை முடக்கும் அநீதிகளை இனங்கண்டு, அவற்றை விசாரணை செய்து அந்த மக்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் .

அம்பாறை மாவட்டத்தில் எமது பிரதேசம் சார்ந்த விடயங்களைப் பேசலாம் என்று நினைக்கின்றேன்.

கல்முனை வடக்கு பிரதேசத்திலே கடந்த 25 ஆம் திகதியில் இருந்து சுழற்சி முறையிலான உண்ணவிரதப் போராட்டத்தை அந்த மக்கள் முன்னெடுத்திருக்கின்றார்கள்.

சுமார் 33 வருடங்களாக இயங்கும் அந்தப் பிரதேச செயலகத்தைப் புறந்தள்ளி மற்றுமொரு பிரதேச செயலகத்தில் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்தி அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்துக்கு மாத்திரம் அந்த நிதி ஒதுக்கீடு இல்லை. தொடர்ச்சியாக இயங்கி வருகின்ற அந்த பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதுடன் அந்த பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை முடக்கப்படும் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அந்த மக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக கல்முனை வடக்கு தமிழ் பிரிவு பிரதேச செயலகமானது 39000 மக்களையும், 29 கிராம சேவையாளர் பிரிவுகளையும், 06 பாரம்பரிய தமிழ் கிராமங்களையும் உள்ளடக்கியதான தனியான ஒரு பிரதேச செயலக அலகாக 1989 ஆம் ஆண்டு உதவி அரச அதிபர் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது.

பின்னர் 93-600-034 இலக்க 1993.03.17 ஆம் திகதி, அதேபோன்று 93-600-034 (1) இலக்க 1993.03.31 ஆம் திகதிய அமைச்சரவை மசோதாக்கள் மற்றும் 1993.07.09 ஆம் திகதிய அமைச்சரவை உப குழுவின் அறிக்கை என்பனவற்றின் அடிப்படையில் 1993.07.28 ஆம் திகதிய அமைச்சரவையின் அனுமதியுடன் பிரதேச செயலகமாக மாற்றப்பட்டது. அதன் அடிப்படையில் தனியான ஒரு பிரதேச செயலகமாக 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சேவை செய்து வருகின்றது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலே 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழர்கள் இருந்தாலும் அதில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே பெரும்பான்மையாக தமிழ் பிரதேச செயலாளர்கள் நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழர்களுக்கான பிரதேச செயலாளர் பிரிவுகளில் மிகவும் குறைந்த அளவிலான நிதி ஒதுக்கீடுகளே மேற்கொள்ளப்படுகின்றன.

அதிலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எவ்வித நிதியும் இல்லை, அபிவிருத்தி கூட்டமும் நடைபெறவில்லை. இது ஒரு பாரிய புறக்கணிப்பு.

கடந்த காலங்களிலே எமது தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிப்புற்றது மாத்திரமல்லாமல் இந்த கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்திலே இருந்த பாரம்பரிய அரச காணிகள், அரச சொத்துக்கள், சிறு நீர்நிலைகள் முஸ்லீம் அரசியல்வாதிகள், கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் ஆகியோரின் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் மூலம் கபளிகரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த விடயங்களை நாங்கள் பல தடவைகள நாடாளுமன்றத்தில் பேசியிருக்கின்றோம். ஜனாதிபதியைச் சந்தித்த போதும் கூட எழுத்து மூல ஆவணம் நான் சமர்ப்பித்திருக்கின்றேன். ஆனால், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

இந்த விடயங்களை எல்லாம் கண்டித்தே எமது மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

இருந்த காணி அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. ஒரு கணக்காளர் இல்லாமையால் அங்கிருக்கும் உத்தியோகத்தர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் நிர்வாகிகள் மாத்திரமல்ல அங்கு வாழும் தமிழ் மக்களும் இதில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே பொது நிர்வாக அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள் நேரடி விஜயம் செய்து அந்த மக்களின் உள்ளக் குமுறல்களை, இந்த நாட்டில் திட்டமிட்டு ஒரு பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளை முடக்கும் அநீதிகளை இனங்கண்டு, அவற்றை விசாரணை செய்து அந்த மக்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.- என்றார்.

# வவுனியாவில் கிணற்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு



(கே.வசந்தன்)

வவுனியா, செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலியார்குளம் பகுதியில் கிணற்றில் இருந்து மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் நேற்று மாலை தனது வீட்டிலுள்ள கிணற்றுக்குப் பக்கத்திலுள்ள வாழைமரத்தின் குழையை வெட்ட முற்பட்ட சமயத்தில் தவறி கிணற்றினுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற செட்டிக்குளம் பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கில் நாளை...

"நாளை முதல் வடக்கு மாகாணத்தின் வவுனியா,மாங்குளம், முறிகண்டி, நட்டாங்கண்டல், துணுக்காய், ஓமந்தை, கரிப்பட்ட முறிப்பு, சின்னத்தம்பனை, பாலைப் பாணி, மூன்றுமுறிப்பு, ஐயன் குளம், மடு,கீரி சுட்டான், தட்டாங்குளம், பகுதிகளில் பகல் காலை 10.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை பகல் பொழுது வெப்பநிலை 41 பாகை செல்சியஸ் இனை அண்மிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் உள்நிலப் பகுதிகளின் பல இடங்களில் வெப்ப அலைகள் வீசுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

வெப்பச்சலனம் காரணமாக ஆங்காங்கே ஒரு சில இடங்களில் பிற்பகல் 2.00 மணிக்கு பின்னரும் காலை 7.00 மணிக்கு முன்னரும் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆனாலும், இம்மழை அதிகரிக்கும் வெப்பநிலையின் பாதிப்புக்களை தற்காலிகமாக தணித்து குறுகிய காலத்திற்கு மட்டுமே சௌகரியமான வானிலையை உருவாக்கும்.

முன்னைய பதிவொன்றில் குறிப்பிட்டது போல, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை வெப்பநிலை உயர்வாகவே இருக்கும்.

எனவே, அதிகரிக்கும் வெப்பநிலை, வெப்ப அலை தொடர்பிலும் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது. அதிகரித்த வெப்பநிலையைக் கருத்தில்கொண்டு எமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வது உசிதமானது." - என்றுள்ளது.

### யாழில் மோதல்...

யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலான 5 மணி நேரத்தில் மேற்படி 22 பேரும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

~~குறிப்பிட்ட நேரத்துக்குள் திடீரென~~ அதிகளவானோர் சிகிச்சைக்காக வந்தமையால் வைத்தியர்களும் சிறிது நேரம் நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

இதேவேளை, சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்கள், அவர்களுடன் உதவிக்கு வந்தவர்கள் ஆகியோர் வைத்தியசாலைக்குள்ளும் மோதலில் ஈடுபட முயன்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் சிலரைக் கைது செய்தனர்.

### பாடசாலை சமூகத்தை...

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"கடந்த வாரம் நடைபெற்ற யாழ். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் இல்ல அலங்காரங்களில் மாணவர்களின் வெளிப்பாடுகள் தொடர்பாக தெல்லிப்பளைப் பிரிவு பொலிஸார் மாணவர்களையும், ஆசிரியர்களையும் விசாரணைக்கு அழைத்தமையும் விசாரணைக்கு உட்படுத்தியமையும் அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற நடவடிக்கையாகும்.

இலங்கை அரசமைப்பின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் கலை ரீதியாகவும் குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் பாடசாலை மட்ட இல்ல விளையாட்டு போட்டி அலங்காரங்களில் மாணவர்களின் பாடசாலை மட்ட வெளிப்பாடுகள் இலங்கை அரசமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரத்துக்கு உட்பட்டதாகும்.

இத்தகைய சுதந்திரங்களை மதிக்காத தெல்லிப்பளை பொலிஸாரின் அச்சுறுத்தல்களுடன் கூடிய விசாரணை செயற்பாடானது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுடன் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கின்ற செயற்பாடுகளாகும்.

கல்விச் செயற்பாடுகளில் தெல்லிப்பளை பொலிஸாரின் அவசியமற்ற நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டைக் கோருகின்றோம்." - என்றுள்ளது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கடந்த வாரம் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது இல்ல அலங்காரங்களில் கவச வாகனங்கள் மற்றும் காந்தள் மலர் போன்ற தோற்றத்தில் அலங்காரம் செய்திருந்ததாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை அழைத்து பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலைமையிலே அதிபர், ஆசிரியர், மாணவர்களை விசாரணைக்கு உட்படுத்தியமை மனித உரிமை மீறல் எனவும், பொலிஸாரின் இத்தகைய அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேயிலைக் கைத்தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைப்பு!

## நாடாளுமன்றில் எதிர்க் கட்சித் தலைவர்



தேயிலை கைத்தொழில் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச நாடாளுமன்றத்தின் கவனத் துக்குக் கொண்டு வந்தார்.

கடந்த காலத்தில் அரசு மேற் கொண்ட தோல்வியடைந்த அரச கொள்கைகளால் இந்த நாட்டுக்கு பிரதான அந்நிய செலாவணியை பெற்றுத் தரும் தேயிலை கைத்தொழில் பல பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளது. எனவே இது தொடர் பில் அரசுவிசேட கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் 12 தேயிலை தொழிற்சாலைகளும், காலியில் 18 தேயிலை தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல தொழிற்சாலைகள் 50 வீதத் துக்கும் குறைவான திறனிலையே உற்பத்தி நடவடிக்கைகள் மேற் கொண்டு வருகின்றன.

தேயிலை உற்பத்திக்கு விசேட உரங்கள் அவசியம். இந்த உரம் 50 கிலோ சுமார் 11000 ரூபாவாக இருப் பதால், வீழ்ச்சியடைந்துள்ள தேயிலை தொழிலை மேம்படுத்த 50 வீதம் உர மானியம் வழங்கப்பட வேண்டும் என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பல சந் தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்தார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (02) பாராளுமன் றத்தில் தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் தேயிலை கைத்தொழில்துறை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினை கள் தொடர்பில் இன்று நாடாளுமன் றத்தில் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

மின்சாரம், உரம், வரி போன்ற பிரச்சினைகளால் போட்டி விலையில் உற்பத்தி செய்வது சவாலாக மாறி யுள்ளது. இங்கு ஒரு கிலோ தேயிலை யின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையில், தரம் பாதிக்கப்படாத வகை யில், அரசிடம் ஏதாவது திட்டம் உள் ளதா என்பதை அறிய விரும்புகிறோம்.

தேயிலை உற்பத்திக்கு உலக மட் டத்தில், புதிய சந்தை வாய்ப்புகளை பெறுவதற்கான அரசு கொண்டுள்ள திட்டத்தை அறிய விரும்புகிறோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளை எடுத்து நோக்கினால், தேயிலை மீளப் பயிரிடல் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் கூற்றுப்படி, 5 வீத மீள பயிரிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவரை 2 வீதம் இவ்வாறு நடந்துள்ளது. இதனால் விளைச்சல் குறைந்துள்ளது. நேரடியாக 5 லட்சம் பேரும், மறை முகமாக 20 லட்சம் பேரும் இதனை சார்ந்துள்ளனர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

60 மில்லியன் ஏற்றுமதி செய்தால் மட்டுமே மேலதிக வரி பதிவு கிடைக் கும். இதனால், புதிய ஏற்றுமதி யாளர்கள் உருவாக மாட்டர். இதனால் தேயிலை விவசாயிக்கு கிடைக்க வேண்டிய நியாயமான விலை கிடைக் காது போகிறது. போட்டிச் சந்தைக் கான சாத்தியக் கூறுகள் இல்லாததால், இந்தக் கட்டுப்பாடுகள் குறித்து சிந் தித்து புதிய ஏற்றுமதியாளர்கள் உரு வாகும் வகையில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலை வர் தெரிவித்துள்ளார்.

# சாய்ந்தமருதுப் பாடசாலை காஸா சிறுவருக்கு நிதி உதவி

(நூருல் ஹுதா உமர் )

காஸா சிறுவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக் கப்பட்டுள்ள ஜனாதிபதி நிதியத்துக்கு சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தி யாலயம் இரண்டு லட்சத்து இருபத் தையாயிரம் ரூபா நிதி அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்தப் பாடசாலை அதிபர், ஆசி ரியர்கள் மற்றும் ஊழியர்களிடையே இருந்து திரட்டப்பட்ட இந்த நிதியை பாடசாலை அதிபர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று (01) கல்முனையில் அமைந் துள்ள வலயக் கல்விப் பணிமனை யில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார், வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமிடம் அந்தத் தொகைக் கான காசோலையை, பணிமனையின் கணக்காளர் வை.ஹபீபுள்ளாஹ் முன்னிலையில் கையளித்தார்.



இந்த நிகழ்வில், பாடசாலையின் பிரதி அதிபர் நுஸ்ரத் பேகம் உதவி அதிபர்களான ஜஹ்பர், றொஸான் டீப்றாஸ், யூ.எல். லாபிர், ஏ.எல்.எம். உவைஸ் அத்துடன் ஆசிரியர் ஜாஸிர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் இல்யாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் நிலைமை

மகாபாரதத்தில் மிகவும் பரிவுக்குரிய பாத்திரம் எது என்று கேட்டால் எல்லோரும் கர்ணன் என்று உடனே சொல்லி விடுவர். பெற்ற தாயிலிருந்து உற்றவர் பலரால் வஞ்சிக்கப்பட்டு, அதனால் வாழும் போது பல பின்னடைவுகளை - நெருக்கடிகளை - சந்தித்தவன் அவன்.

அதுபோல இலங்கை அரசியலில் இன்று பெரிதும் பரிவிற்குரிய அல்லது பரிதாபத்துக்குரிய பாத்திரம் எது என்று நோக்கினால் அது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க என்றுதான் கூற வேண்டும்.

அவர் இன்று நாட்டின் ஜனாதிபதி. நிறைவேற்றதிகாரத்தை தம் கைவசம் வைத்திருப்பவர். அரசியலில் தோற்றுப் போய்க் குப்பைக் கூடைக்குள் எறியப்பட்டவராக கிடந்த அவரை, கோட்டாபயவுக்கு எதிரான மக்களின் எழுச்சிப் போராட்டமான அறகலயவின் கருணை, அதிர்ஷ்ட தேவதை போலக் கதவைத் தட்டி நாட்டின் ஜனாதிபதியாக்கியிருந்தாலும் இன்றும் அவரின் நிலைமை பெரும் பரிவுக்கும் பரிதாபத்திற்கும் உரியதுதான்.

இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக் காட்டியபடி 'சரஸ்வதி சபதம்' படத்தில் வீதியில் அநாதரவாக அலைந்த பிச்சைக்காரி, பட்டத்து யானை மாலை போட்டமையால் நாட்டின் மகாராணியானமை போல ரணிலுக்குக் கிடைத்தது இந்த ஜனாதிபதிப் பதவி என்றால் அது தவறில்லைத்தான்.

இந்த நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டில் ஒன்றாக இதுவரை காலம் இருந்தது ஐக்கிய தேசிய கட்சி. சுதந்திர இலங்கையின் முதலாவது அரசை அமைத்த பழமையான கட்சி அது. அதன் தலைமைத்துவத்தை 30 ஆண்டுகளாக விடாமல் தன் கைவசம் வைத்திருந்து, அடுத்த கட்ட தலைமை உருவாக்காமல் ஆப்படித்த அவர், அந்தச் செயற்பாட்டின் மூலம் கட்சியைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கினார்.

அவரது தலைமையில் கடைசி பொதுத் தேர்தலில் அவரது கட்சி எந்த மாவட்டத்திலும் விருப்பு வாக்குகளை எண்ணும் தகுதியைக் கூடப் பெறாமல் தூக்கிக் கடாசப்பட்டது. அந்தப் பெரும் தோல்வியின் பின்னரும் கட்சியின் தலைமைப் பதவியை அவர் விட்டுக் கொடுக்கவில்லை. கட்சிக்குத் தேசிய பட்டியல் மூலம் கிடைத்த ஒரேயொரு எம்.பி. பதவியையும் தானே பயன்படுத்தி நாடாளுமன்றத்துக்குள் புகுந்து கொண்டார். அதன் மூலம் இன்று அவர் ஜனாதிபதியானமை தெரிந்த வரலாறு.

1999 ஜனாதிபதி தேர்தலில் புலிகள் தரப்பு கொழும்பில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் கூட்டத்தில் நடத்திய தற்கொலைத் தாக்குதல் அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வாய்ப்பை மண் கவ்வ வைத்தது.

அதன்பின் 2001 - 2003 காலகட்டத்தில் நாட்டில் மிக மோசமாகக் கட்டவிழ்ந்த யுத்தத்தை நிறுத்தி, புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்து, சமரசப் பேச்சு நாடகம் நடத்தினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. உள்ளக சுயநிர்ணய உரிமையுடன், வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில் சமஷ்டித் தீர்வு என்று பசப்பு வாக்குறுதி கொடுத்தார். அதனைப் பயன்படுத்தியே புலிகளைப் பிரித்து நலிவடையவும் வழி வகுத்தார்.

கடைசியாக 2005 ஜனாதிபதி தேர்தலில் அதே தமிழ் மக்கள் காலை வாரியமையால் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் மண் கவ்விப் பெரிதும் பரிவிற்குரியவரானார்.

அதன்பின்னர் ராஜபக்ஷக்களை வீழ்த்துவதற்காக 2010 மற்றும் 2015 ஜனாதிபதி தேர்தல்களில் தமது வேட்பாளர் வாய்ப்பைப் பொது வேட்பாளர்களுக்கு விட்டுக் கொடுத்து, அவர்கள் வெற்றிக்காக உழைத்தார். 2015 இல் வென்ற மைத்திரிபால கடைசியாக அவரின் முதுகிலேயே குத்த அவர் பரிதாபத்துக்குரியவரானார்.

2019 ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் நிலையை அவருக்கு வழங்க அவரது கட்சியே மறுத்து, அவரை வஞ்சிக்கும் நிலைமை ஏற்பட்டது.

இதுவரை தமது எதிரியாக நின்ற ராஜபக்ஷக்களின் தயவில் இப்போது ஜனாதிபதியாகி, அடுத்த தேர்தலில் அதே ராஜபக்ஷக்களின் பின்புலத்தில் பொது வேட்பாளராகக் களமிறங்க அவர் முயல்கின்றார்.

இரண்டு, மூன்று தடவைகள் ஜனாதிபதி வேட்பாளர் வாய்ப்பைப் பொது வேட்பாளருக்கும் கட்சி வேட்பாளருக்கும் விட்டுக் கொடுத்த அவருக்கு, இன்று பொது வேட்பாளராக நிற்பதற்கு ஆதரவு தர யாரும் இல்லை. பெரிதும் பரிவுக்கும் பரிதாபத்துக்குமுரிய அரசியல் பாத்திரம் அதுதான்.

# பருத்தித்துறையில் வாள் வெட்டு! துண்டாப்பட்ட இளைஞனின் கை!!



உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு வாள் வெட்டில் முடிவடைந்ததில் இளைஞன் ஒருவர் மணிக்கட்டுடன் கையை இழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை, புலோலி பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் செந்தூரன் (வயது 30) எனும் இளைஞனே மணிக்கட்டுடன் ஒரு கையை இழந்துள்ளார்.

புலோலி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேகநபர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும், தற்போது அவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

# நுவரெலியா கந்தப்பளை விவசாயிகளுக்கும் மரக்கறி சேகரிப்பாளர்களுக்கும் முரண்பாடு!

## தீர்த்து வைக்கக் கோருகிறார் கந்தப்பளை மரக்கறி சேகரிப்பாளர் சங்க தலைவர் தமிழ்வாணன்

**(ஆ.ரமேஸ்)**

நுவரெலியா கந்தப்பளை பிரதேசத்தில் விவசாயிகளுக்கும், மரக்கறிகள் சேகரிப்பாளர்களுக்கும் இடையில் மரக்கறிகள் சேகரிக்கும் விடயத்தில் தொடர்ச்சியாக கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம் வெளியிடும் விலைப் பட்டியலில் ஏற்படும் குளறுபடியே இந்த முரண்பாட்டுக்குக் காரணம் என்று கந்தப்பளை பிரதேச மரக்கறிகள் சேகரிப்பாளர் சங்க தலைவர் ஆர். தமிழ்வாணன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கந்தப்பளை பிரதேச மரக்கறிகள் சேகரிப்பாளர் சங்க தலைவர் தலைவர் தலைமையில் (01) கந்தப்பளையில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளில் கந்தப்பளை பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளுக்கு தரம் அடிப்படையில் தனி மதிப்பு காணப்படுகின்றது.

அதேநேரத்தில் கந்தப்பளை பிரதேசத்தில் இருந்தே தினமும் அதிகபட்ச மரக்கறிகள் அறுவடை செய்யப்பட்டு நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய சந்தைக்கும் வெளி மாவட்ட சந்தைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்த நிலையில் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம் தினமும் வெளியிடும் விலைப் பட்டியலின் அடிப்படையில் கந்தப்பளை பிரதேச விவசாயிகளிடம் இருந்து மரக்கறிகள் சேகரிக்கப்பட்டு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம் ஊடாக தனிப்பட்ட ரீதியில் நுவரெலியா மரக்கறிகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு அந்த விலையை எமது மரக்கறி சேகரிப்பாளர் சங்கத்துக்கு அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அறிவிக்கப்படும் அன்றைய நாளுக்கு உரிய விலையின் அடிப்படையில் கந்தப்பளை விவசாயிகளின் அறுவடை செய்யக் கூடிய மரக்கறிகளைத் தினமும் அதிகாலையில் சேகரிக்க அதற்கான தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அதேநேரத்தில் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம் தினமும் 09 மணிக்கு பிறகே அன்றைய நாளுக்கு உரிய விலைப் பட்டியலை வெளியிடுகிறது.

அந்த சந்தர்ப்பத்தில் நாள் விவசாயிகளின் தோட்டத்தில் அரைவாசி மரக்கறிகளை அறுவடை செய்து விடுகின்றனர். இந்த நிலையில் நுவரெலிய பொருளாதார மத்திய நிலையம் தமக்கு அறிவித்த விலையை விட கூடுதலான விலையை பட்டியலிட்டு விடுகிறது.

இதனால் பொருளாதார மத்திய நிலையம் பட்டியலிடும் விலையை பார்வையிட்டு பின் மரக்கறி விவசாயிகள் சங்கத்தினருடனும், வர்த்தகர்களுடனும் முரண்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

அதேநேரத்தில் பொருளாதார மத்திய நிலையம் தன்னிச்சையாக மரக்கறி விலைகளை வெளியிடுவதால் ஏற்படும் குளறுபடி காரணமாக பிரதேசத்தில் விவசாயிகளும், மரக்கறி சேகரிப்பாளர்களும் பாரிய பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றால் முதலில் நுவரெலிய பொருளாதார மத்திய நிலையம் தினமும் காலை 07 மணிக்கு முன் அன்றைய நாளுக்கு உரிய விலையை பட்டியலிட்டு அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

அதேபோல மரக்கறிகளின் உற்பத்திச் செலவு, அறுவடை செய்ய ஈடுப்படுத்தப்படும் தொழிலாளர் சம்பள செலவு, வாகன போக்குவரத்து செலவு, என கருத்தில் கொண்டு விலை நிர்ணயம் செய்யவும் வேண்டுகோள் முன்வைக்கின்றோம்.

எனவே நுவரெலிய பொருளாதார மத்திய நிலையம் நுவரெலியா மாவட்ட செயலாளரின் பணிப்பின் கீழ் இயங்குவதால் இதற்காக தீர்வு விடயத்தில் மாவட்ட செயலாளர் தலையிட்டு கந்தப்பளை பிரதேச விவசாயிகளுக்கும், மரக்கறி சேகரிப்பாளருக்கும் இடையில் தினமும் ஏற்படும் கருத்து முரண்பாடுகளுக்கும், பாதிப்புக்களுக்கும் தீர்வை பெற்று தர வேண்டும் .– என்றார்.

# ஜனாதிபதியின் பலஸ்தீனச் சிறுவர் நிதியத்தை ஊக்குவிக்க முஸ்லிம் தலைவர்கள் வரவில்லை!

## வருத்தமளிக்கிறது என்கிறார் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலீலுர் ரஹ்மான்



(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் ஜனாதிபதியின் பலஸ்தீன சிறுவர் நிதியதத்துக்காகச் சேகரிக்கப்பட்ட பணம் உத்தியோகபூர்வமாக பலஸ்தீன மக்களுக்கு வழங்கப்பட்டது. இலங்கை முஸ்லிம்கள் என்ற வகையில் இந்த நிதியத்துக்கு வித்திட்ட ஜனாதிபதிக்கும், நிதி வழங்கிய மனிதாபிமானிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளருமான, கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

ஜனாதிபதி ரணில் பாலஸ்தீனம் தொடர்பான ஒற்றை நிலைப்பாட்டை கொண்டிராமல் இரட்டைக் கொள்கையை கடைப்பிடிப்பதாக சிலர் அரசியல் ஆதாயங்களுக்காக பிழையான, நியாயமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும், அவை அனைத்துக்கும் பதில் அளிக்கும் வகையில் ஜனாதிபதி இந்த நிதியைக் காஸா சிறுவர்களுக்கு வழங்கியுள்ளார்.

ஆனாலும் முஸ்லிம் சமூகத்தில் உள்ள சில மத, அரசியல் மற்றும் சிவில் அமைப்புகளின் தலைவர்கள் இந்த நிதியத்தை முன்வந்து தொடங்காமல் கள்ள மௌனம் காப்பதன் மூலம் பலஸ்தீன சிறார்களிடம் அவர்களுக்கு இருந்த கருணை மற்றும் பாசாங்குத்தனமான போக்குகள் சில அரபுத் தலைவர்களைப் போலவே இருந்ததை மெய்ப்பித்துள்ளது.

இலங்கையில் உள்ள சில மார்க்க, அரசியல் மற்றும் சிவில் அமைப்புகளின் தலைவர்கள் வெளிநாடுகளில் சமீபத்தில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களுக்கு முஸ்லிம் பள்ளிவாசல்கள் மூலம் முஸ்லிம் சமூகத்திடம் இருந்து நிதி சேகரிக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், பாலஸ்தீன மக்களுக்காக ஜனாதிபதியால் நிறுவப்பட்ட நிதியத்துக்காக முஸ்லிம் சமூகத்திடம் இருந்து பள்ளிவாசல்கள் மூலம் நிதி சேகரிக்க முயற்சிக்க முஸ்லிம் தலைமைகள் தயக்கம் காட்டியதன் மூலம் இவர்களின் இரட்டை நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முடிந்தது. இவர்களின் இந்தச் செயற்பாடு வருத்தமளிக்கிறது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி என்பவர் ஒவ்வொரு சிங்கள, தமிழ், முஸ்லிம், சமூகத்தினதும் பக்கச்சார்பற்ற பாரபட்சமற்ற ஜனாதிபதி என்பதே அதன் அர்த்தம். உலக புவிசார் அரசியல் பின்னணியின் அடிப்படையில் ஜனாதிபதி எடுக்கும் முடிவுகள் அணிசேரா கொள்கையை மீறாமல் சமநிலைப்படுத்தப்பட வேண்டும். இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக இருப்பதால், அது சுற்றியுள்ள உலக நாடுகளுடன் நியாயமான கொள்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

எனவே, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள வளைகுடா அரபு ஷேக்குகளின் போலித்தனமான போக்கை முஸ்லிம் சமூகத்தில் உள்ள மத, அரசியல், சிவில் அமைப்புகளின் தலைவர்கள் கண்டிக்க வேண்டும். ஆனால் மத, அரசியல் மற்றும் சிவில் அமைப்புகளின் தலைவர்கள் மத்திய கிழக்கின் வளைகுடா அரபு ஷேக்குகளை கோபப்படுத்த விரும்பாததால் அவர்களுக்கு எதிராக வாய் திறக்காமல் நரிபோல் தந்திரமாக உள்ளனர்.

பாலஸ்தீனக் குழந்தைகளுக்காக ஜனாதிபதியால் நிறுவப்பட்ட நிதியத்துக்கு முஸ்லிம் சமூகம் அதிகளவான பணத்தைச் சேகரித்து அந்தக் குழந்தைகளின் நலனுக்காக அனுப்ப வேண்டும்.- என்றார்.

# கற்ப கரு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனையில் காசோலை!

(நவாஸ்)

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் அட்டாளச்சேனையில் கற்ப கரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 5 பயனாளிகளுக்கான தலா 3000 ரூபா பெறுமதியான காசோலைகள் இன்று (02) அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தில் அதன் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹிஜா முசாபிரால் பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி ஹஸ்பியா கலந்து கொண்டார்.





# நீதி அமைச்சருடன் சர்வ மத தலைவர்கள் இணைந்து நடத்தியுள்ள இஃப்தார் நிகழ்வு





கொழும்பு சங்கராஜ மாவத்தை அமைந்துள்ள நீதி மற்றும் சிறைச் சாலை அலுவல்கள் மற்றும் அரசி யலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஏற்பாட்டில் இஃப்தார் நிகழ்வு நடைபெற்றது.

இதில் வெளியுறவு விவகார அமைச் சர் அலிசப்ரி கொழும்பு பா.உ ஏ.எச் எம் பௌசி மற்றும் இந்தோநேஷிய தூதுவர், சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் அனுராதா ஹேரத், நௌசர் பௌசி மற்றும் சர்வமத தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# இளைஞர் சம்மேளன ஏற்பாட்டில் தலைமைத்துவப் பயிற்சி பட்டறை




(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச இளைஞர் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பட்டறை ஆரம்ப நிகழ்வும் வருடாந்த இப்தார் நிகழ்வும் திங்கட் கிழமை இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

இளைஞர் சேவைகள் உத்தியோ கத்தர் ஏ.ஆர்.றியாஸ் நெறிப்படுத்த லில் இளைஞர் சம்மேளனத்தின் தலை வர் எஸ்.எம்.அஹமட் றிஜாஸ் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இறக்காமம் கிளையின் தலைவரும், பிரபல சொற்பொழிவாளருமான மௌலவி எம்.எச்.வஹாப் கலந்து கொண்டு விசேட சொற்பொழிவாற்றி னார்.

இதன்போது இறக்காமம் பிரதேச செயலக உள வளத்துறை ஆலோச கர் ஏ.எச்.றகீப், இறக்காமம் பொலிஸ் நிலைய பதில் நிலையப் பொறுப்பதி காரி எம்.ஐ.ஜௌபர், அரசியல் பிர முகர்கள் இளைஞர் சம்மேளன உறுப் பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் அதிபர்களுக்குச் செயலமர்வு



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருகோணமலை, கிண்ணியா மற்றும் மூதூர் கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு திருகோணமலை எம்.டி.ரி.யூ. கட்டட ஒன்று கூடல் மண்டபத்தில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு வளவாளராக இந்தியா தமிழ் நாட்டைச் சேர்ந்த கல்வியலாளர் புஸ்பலதா பூரணன் கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.துஸ்யந்தன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் நிமலரஞ்சன் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 100 அதிபர்களும் கலந்து கொண்டனர்.

# ஒப்பந்த அடிப்படையில் இணைந்த நடத்துனர்களுக்கு நியமனக் கடிதம்





கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் மக்களுக்கு சீரான பொதுப் போக்குவரத்து சேவைகளை வழங்கும் நோக்கில், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 24 புதிய நடத்துனர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நியமனம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ், பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் குலதிலக உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# சாதிவாரி கணக்கெடுப்புக்கு மறுத்த பா.ஜ.கவுடன் பா.ம.க. இணைந்தது ஏன்?

## பழனிசாமி கேள்வி




"சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மாட்டோம் என்ற பா.ஜ.கவுடன் பா.ம.க. கூட்டணி வைத்துள்ளது. ஆனால், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த நான் அரசாணை வெளியிட்டேன்."

– இவ்வாறு வேலூர் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

வேலூர் மக்களவைத் தொகுதி இடம்பெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முன்னாள் முதல்வருமான பழனிசாமி உரையாற்றுகையில்,

"இங்கு போட்டியிடும் ஒரு வேட்பாளர் அ.தி.மு.கவினரை பார்த்து துரோகம் செய்துவிட்டனர் என பேசுகிறார்.

அ.தி.மு.கவினர் என்றைக்கும் உழைக்க பிறந்தவர்கள், விசுவாசிகள். எம்.ஜி.ஆரால் அடையாளம் காணப்பட்ட நீங்கள் இன்று செல்வ செழிப்புடன் இருக்க எங்கள் தொண்டன்தான் காரணம். தொண்டன் உழைப்பால் செல்வந்தரான நீங்கள் நன்றி மறந்தவர். உங்களுக்கு நல்ல எண்ணம் இல்லை.

இங்கு போட்டியிடும் தி.மு.க. வேட்பாளரும், அமைச்சர் ஒருவரும் பெண்களை அவமானப்படுத்துகிறார்கள். 2.15 கோடி பெண்களுக்கு மாதம் ஆயிரம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு, வெறும் 70 லட்சம் பேருக்கு மட்டுமே கொடுக்கிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியில் மாணவர்கள் மடியில் மடிக்கணினி விளையாடியது. இந்த திட்டத்துக்காக 7,300 கோடி ரூபாய் ஒதுக்கி 52 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கி அறிவுப்பூர்வமாக சிந்திக்க வைத்தோம். இன்று மாணவர்கள் போதைப்பொருள் பழக்கத்துக்கு தி.மு.க. கொண்டு சென்றுள்ளது. சாராயம் குடித்து உயிரிழுந்தவர்களுக்கு 10 லட்சம் ரூபா கொடுத்தது தி.மு.க. அரசு.

மத்திய பா.ஜ.க. அரசு தமிழக புயல், வெள்ளத்துக்கு நிதி வழங்கவில்லை. ஆனால், அவர்கள் ஆளும் உத்தர பிரதேசம், பிஹாருக்கு மட்டும் சிறப்பு நிதி ஒதுக்குகிறார்கள். தமிழ்நாட்டுக்கு மட்டும் நிதி கொடுக்க மறுக்கிறார்கள். அதனால் தான் தேசிய கட்சி யுடன் கூட்டணி வேண்டாம் என நாம் தனியாக வந்தோம். நமது உரிமையை காப்போம். இனி சிறுபான்மை மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் உங்கள் பின்னால் நின்று முறியடிப்போம். நாங்கள் பா.ஜ.க. கூட்டணியை முறித்ததால் உங்களுக்கு ஏன்? பயம் வருகிறது.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மாட்டோம் என கூறிய கட்சி பா.ஜ.க. அந்த கட்சியோடு பா.ம.க. எப்படி கூட்டணி வைத்தது. ஆனால், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அரசாணை பிறப்பித்தது நான்தான். ஆனால், தி.மு.க. அரசு கண்டுகொள்ளாததால் காலாவதியாகிவிட்டது." – என்றார்.

# தமிழக நலனை கருதி பா.ஜ.கவுடன் கூட்டணி: திருக்கழுகுன்றத்தில் அன்புமணி பிரச்சாரம்

தமிழக நலனை கருதி பா.ஜ.கவுடன் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது என்று திருக்கழுகுன்றத்தில் பா.ம.க. தலைவர் அன்புமணி தேர்தல் பிரச்சாரத்தில் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றம் பஸ் நிலையம் அருகே பா.ம.கவின் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த பொதுக் கூட்டத்தில் அன்புமணி உரையாற்றுகையில்,

"தமிழகத்தின் நலனுக்காக பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடியுடன் அவருக்கு நெருங்கிய நட்பு உள்ளது. இதன்மூலம், தமிழகத்தின் நலனுக்கான திட்டங்களை நாம் செயல்படுத்த முடியும். அதனால், நாம் வெற்றி பெற்று மோடிக்கு ஆதரவளித்தால், தமிழகத்தில் பெரிய அளவிலான திட்டங்களை நாம் செயல்படுத்த முடியும்.





தமிழக நலனை கருதி மட்டுமே நாம் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்துள்ளோம். பாலாற்றில் தடுப்பணை கட்ட வேண்டும் என முதலில் குரல் கொடுத்தது பா.ம.க. நிறுவனர். இதன் பேரி லேயே, பாலாற்றில் தடுப்பணை கட்டப் பட்டது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசு தமிழகத்தில் உள்ளது. பல்வேறு கவர்ச்சிகரமான தேர்தல் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, தகுதி உள்ளவர்கள் தான் அதில் பயன்பெற முடியும் என மக்களை ஏமாற்றும் ஓர் ஆட்சி இது. பா.ம.க. வேட்பாளரின் வெற்றியை அடுத்து மீண்டும் தங்களை நன்றி கூட்டத்தில் சந்திக்கிறேன்." – என்றார்.

# இந்தியப் பொருளாதாரம் புதிய சாதனை படைக்கிறது

## பிரதமர் மோடி பெருமிதம்



இந்தியப் பொருளாதாரம் புதிய சாதனை படைக்கிறது என்று ரிசர்வ் வங்கியின் 90 ஆவது ஆண்டு விழாவில் பிரதமர் மோடி உரையாற்றியுள்ளார்.

இந்திய ரிசர்வ் வங்கி கடந்த 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் மும்பையை தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதன் 90 ஆவது நிறுவன நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

" ரிசர்வ் வங்கி இன்று 90 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்து வரலாற்று சாதனை படைத்துள்ளது. இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் ரிசர்வ் வங்கி முக்கிய பங்கு வகித்து வருகிறது. கடந்த 2014 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியின் 80 ஆவது நிறுவன நாள் விழாவில் நான் பங்கேற்றேன். அப்போது, வங்கித் துறை பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருந்தது. குறிப்பாக வங்கிகளின் வசூலாகாத கடன்கள் அதிக அளவில் இருந்தது. இதனால் வங்கித் துறையின் எதிர்காலம் மற்றும் நிலைத்தன்மை கேள்விக் குறியாக இருந்தது.

அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரத்தை தற்சார்பு கொண்டதாக மாற்ற வேண்டும்.

உலக நாடுகளின் ஒட்டுமொத்த ஜிடிபி வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு 15 சதவீதமாக உள்ளது.கரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்காக உலக நாடுகள் போராடி வருகின்றன.

இந்த நிலையில் இந்தியப் பொருளாதாரம் விரைவாக வீழ்ச்சியிலிருந்து மீண்டதுடன் புதிய சாதனைபடைத்து வருகிறது. இந்த வளர்ச்சிக்கு ரிசர்வ் வங்கியின் பங்கு முக்கியமாக அமைந்துள்ளது.

பணவீக்கத்தை கட்டுக்குள் வைப்பதும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதும் உலக நாடுகளுக்கு மிகவும் சவாலாக உள்ளது. இதற்காக ரிசர்வ் வங்கி ஒரு சிறந்த மாதிரியை உருவாக்க வேண்டும். அது உலக நாடுகளுக்கும் முன்னுதாரணமாக விளங்க வேண்டும்.

உலகில் மிகவும் அதிக இளைஞர்களைக் கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது. அந்த வகையில், இந்திய இளைஞர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்வதில் ரிசர்வ் வங்கிக்கு முக்கிய பங்கு உள்ளது." – என்றார்.

# வெறுப்பை தூண்டும் வகையில் பேசுகிறார் உதயநிதி மீது தேர்தல் அதிகாரியிடம் புகார்

கடலூரில் எதிர்க்கட்சிகள் மீது வெறுப்பை தூண்டும் வகையில் அமைச்சர் உதயநிதி பேசினார் எனவும் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் தலைமை தேர்தல் அதிகாரியிடம் அ.தி.மு.க. சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

தலைமை செயலகத்தில், தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூவிடம் புகார் அளித்த பின், அதிமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் இன்பதுரை செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"கடலூர் தேர்தல் பிரச்சாரத்தில், அமைச்சர் உதயநிதி எதிர்க்கட்சிகளை சிறுமைப்படுத்தியும், மிரட்டும் விதமாகவும் பேசியுள்ளார். தேர்தலில் அரசின் சாதனைகளை கூறிவாக்கு கேட்கலாம். அல்லது எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை விமர்சிக்கலாம்.

தேர்தல் ஆணையத்தின் விதிகள்படி உதயநிதி பேசியது தவறு. இதுதவிர தொண்டர்களுக்கு இடையில் வெறுப்பை தூண்டும் விதமாக ஒரு அமைச்சரே கூறினால், அதை எப்படி ஏற்க முடியும். கட்சிகளின் கொள்கைகள், எதிர்க்கட்சிகளின் தவறுகளை சுட்டிக்காட்டலாம்.



ஆனால், அரசியலமைப்பின்பால் உறுதிமொழி எடுத்துக் கொண்ட அமைச்சர் பேசியது தவறு. எனவே, அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவரை தேர்தல் பிரச்சாரத்தில் இருந்து விலக்கி வைக்கவேண்டும். அனுமதியளிக்க கூடாது என்றும் தெரிவித்து புகார் அளித்துள்ளோம். நடத்தை விதிகள் வந்தபின் தேர்தல் அதிகாரிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றார்.



# இஸ்ரேலிய எறிகணை தாக்குதலில் ஈரானிய சிரேஷ்ட தளபதிகள் பலி

இஸ்ரேலிய எறிகணை தாக்குதலில் 2 ஈரானிய சிரேஷ்ட தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனை ஈரானிய அரச ஊடகம் ஒன்று உறுதிப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் கவலையடைவதாக ஈரான் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில், இஸ்ரேல் எந்தவித கருத்துக்களையும் இதுவரை வெளியிடவில்லை.

அதேநேரம், காசாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 மனிதாபிமான உதவி பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில், நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.



# இஸ்ரேலிய பிரதமருக்கு அறுவை சிகிச்சை

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு மேற்கொள்ளப்பட்ட குடலிறக்க அறுவை சிகிச்சையைத் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதனைதொடர்ந்து நேற்று அவர் வீடு திரும்புவார் என மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“பிரதமரின் உடல்நிலை சீராக உள்ளது. அவர் மருத்துவமனையில் இருந்து தனது அன்றாட பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்.” என குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜெருசலேமில் உள்ள ஹடாசா மருத்துவ மையம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,”

பிரதமர் நெதன்யாகுவிற்கு வெற்றிகரமாக குடலிறக்க அறுவை சிகிச்சைக்கு மேற்கொள்ளப்பட்டாகவும், பின்னர்,



நெதன்யாகு சுயநினைவுடன் இருக்கின்றார். குடும்பத்துடன் உரையாடி வருகின்றார். அவர் குணமடைந்து வருகிறார்.” என குறிப்பிட்டுள்ளது.



# இம்ரான் கானுக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை நிறுத்தி வைப்பு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபிக்கு ஊழல் வழக்கில் விதிக்கப்பட்ட14ஆண்டுசிறைத்தண்டனையை நீதிமன்றம் நிறுத்தி வைத்து உத்தர விட்டுள்ளது.

குறித்த உத்தரவை நேற்று பாகிஸ் தான் உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

எனினும், ஏனைய வழக்குகளில் அளிக்கப்பட்ட தீர்ப்புகள் காரணமாக அவர்கள் இருவரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட மாட்டார்கள் என தெரிவிக் கப்படுகின்றது.

இம்ரான் கானுக்கும் புஷ்ரா பீபிக்கும் 14 வருட சிறைத்தண்டனை விதித்து இஸ்லாமாபாத் பொறுப்புடைமை நீதிமன்றம் ஜனவரி 31 ஆம் திகதி தீர்ப்பளித்தது. பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்பாக இந்தத் தீர்ப்பு அளிக்கப் பட்டிருந்தது.



இந்த நிலையில், இவர்கள் தலா 10 வருட காலம் அரச பதவிகளை வகிப்பதற்கு தடை விதிக்கப்பட்டதுடன், இருவருக்கும் தலா 787 மில்லியன் பாகிஸ்தான் ரூபா அபராதமும் விதிக் கப்பட்டது.

மேலும், இந்த தீர்ப்புக்கு எதிரான இம்ரான் கானின் மேன்முறையீட்டு மனுவை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், மேற்படி தண்டனைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# இத்தாலியில் வீழ்ச்சியடையும் குழந்தைகள் பிறப்பு வீதம்

ஐரோப்பிய நாடான இத்தாலியில் கடந்த சில ஆண்டுகளாக குழந்தைகள் பிறப்பு வீதம் குறைந்து வருவதாக அந்த நாட்டின் தேசிய புள்ளியியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த 2022 ஆம் ஆண்டு அங்கு குழந்தை பிறப்பு விகிதம் 6.7 ஆக இருந்தது எனவும் ஆனால் 2023 இல் இது 6.4 சதவீதமாக சரிந்துள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்தாண்டு 379,000 குழந்தைகள் பிறந் துள்ளதுடன் இது முந்தைய ஆண்டை விட சுமார் 14 ஆயிரம் குறைவாக உள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

மேலும், கடந்த ஜனவரி 1 ஆம் திகதி நிலவரப்படி நாட்டில் 5.80 கோடி மக்கள் வசித்து வருகின்றனர் எனவும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7000 பேர் குறைவாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து இத்தாலிக்கு குடியேறுபவர்களின் எண்ணிக்கை 3.2 சதவீதம் அதிகரித் துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 05

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 02/04/2024

## ஏப்ரல் மாதமும் பனிப்பொழிவு!

ஒன்ராரியோ,ஏப்ரல்02
ஏப்ரல் மாதத்தில் கனடாவின் பல பகுதிகளிலும் பனிப்பொழிவு ஏற்படுவது ஆச்சரியமில்லை என கனடிய வானிலை C2



# 4 லட்சம் மாணவர்களுக்கு உணவை வழங்கும் திட்டம்

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவிப்பு

ஒன்ராரியோ,ஏப்ரல்02
நாடு முழுவதிலும் 400,000 மேலதிக மாணவர்களுக்கு உணவை வழங்கும் தேசிய பாடசாலை உணவு நிகழ்ச்சியை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்திற்கு முந்தைய தேர்தல் தொகுதிகளுக்கான விஜயத்தின் போது பிரதமர் இந்த நிகழ்ச்சியை அறிவித்துள்ளார். 02

# கார்பன் விலை அதிகரிப்பை ஆட்சேபித்து நெடுஞ்சாலையை மறித்துப் போராட்டம்!

அல்பேர்ட்டா,ஏப்ரல்02
கல்கரிக்கு மேற்கே கொக்ரேன் பகுதியில் டிரான்ஸ் கனடா நெடுஞ்சாலையை மறித்து கார்பன் வரி அதிகரிப்புக்கு எதிராக போராட்டம் இடம்பெற்றது.

கனடிய மற்றும் அல்பேர்ட்டா கொடிகளை வைத்துக் கொண்டு நூற்றுக் கணக்கான போராட்டக்காரர்கள் ஏபர்ல் முதலாம் திகதி வரியை நீக்குமாறு கோஷமிட்டனர்.

இதனால், இந்த நெடுஞ்சாலையின் ஒரு பகுதி போக்குவரத்திற்குத் தடைப்பட்டிருந்தது.

கார்பன் வரிக்கு எதிராக நாடெங்கிலும் நடைபெற்ற 15 போராட்டங்களில் ஒன்றாக இந்தப் போராட்டம் உள்ளது.

நோவா– ஸ்கோட்சியா, நியூ பிரன்ஸ்விக், மனிடோபா மற்றும் சசகெச்சுவான் மாகாணங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் முதலாம் திகதி முதல் தொன் ஒன்றுக்கான கார்பன்




விலை 15 டொலர்களால் அதிகரித்தது.

இது மக்களின் வாழ்க்கைச் செலவில் பெரும் அதிகரிப்புக்குக் காரணமாக அமையும் என்பதால், பல மாகாணங்களின் முதல்வர்களும் இந்த அதிகரிப்பை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# மாகாண முதல்வர்கள் அரசியல் இலாபத்திற்காகவே கார்பன் விலை அதிகரிப்புக்கு எதிராகக் கோஷமாம்

## இப்படிக் குற்றம் சுமத்துகின்றார் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

ஒன்ராரியோ,ஏப்ரல்02

பெரும்பாலான மாகாண முதல்வர்கள் அரசியல் இலாபத்திற்காகவே கார்பன் விலை அதிகரிப்புக்கு எதிராக கோஷமிடுகின்றனர் எனப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சுமத்தியுள்ளார்.

கார்பன் விலை அதிகரிப்பு தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அவசர கூட்டம் ஒன்றிற்கு நியூபவுன்லாந்து மற்றும் லெப்ரடோர் மாகாண முதல்வர் விடுத்த அழைப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, ஜஸ்டின் ட்ரூடோ இவ்வாறு குறிப்பிட்டார்.

கனடாவின் மாகாணங்களை ஆட்சி செய்யும் முதல்வர்களில் ஒரேயொரு லிபரல் கட்சியின் முதல்வாரன அன்ரூ பியுரேயும் கார்பன் விலை அதிகரிப்புக்கு எதிராக மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றார்.

கார்பன் விலை அதிகரிப்பு என்பது, குடும்பங்கள் காலாண்டில் மீளப்பெறும் தொகையினையும் அதிகரிக்கும் என பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை ஊடகத்திற்கு தெரிவிக்காமல், அரசியல் இலாபத்திற்காக மாகாண முதல்வர்களும், எதிர்க் கட்சியினரும் தவறான பிரசாரத்தை முன்னெடுத்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஏப்ரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இளவேனிற்காலம் அதன் எதிர்பாராத வானிலை மாற்றங்களை உள்ளடக்கியது எனவும் வானிலை நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த தர்க்கத்தை நியாயப்படுத்தும் வகையில் 1981ஆம் ஆண்டு முதல் 2010 வரையான ஏப்ரல் மாத பனிப்பொழிவு தரவுகளை வானிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ளது.




### 4 லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிவிப்பின் போது நிதியமைச்சரும், துணைப் பிரதமருமான கிறிஸ்டியா ப்ரீலான்ட், குடும்பங்களுக்கான அமைச்சரான ஜென்னா சட்ஸ் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

தேசிய உணவு நிகழ்ச்சிக்காக அடுத்து வரும் ஐந்து வருடங்களில் 1 பில்லியன் டொலர்கள் வரை மத்திய அரசாங்கம் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

கல்வி என்பது மாகாண அரசாங்கத்தின் வரையறைக்குட்பட்டதாக இருக்கின்ற போதிலும், மாகாண அரசாங்கங்களுடன் இணைந்து செயற்படுவதற்கான தேசிய நிகழ்ச்சியாக தேசிய பாடசாலை உணவு நிகழ்ச்சி இருக்கின்றது.

கடந்த வருடங்களில், பிரிட்டிஷ் கொலம் பியா, மனிடோபா மற்றும் நோவா ஸ்கோச்சியா மாகாணங்கள் பாடசாலை உணவு நிகழ்ச்சிக்காக நிதி ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாகாணங்கள், பிராந்தியங்கள் மற்றும் பூர்வீகக் குடியினருடன் இணைந்து செயற்படுவதன் மூலம், நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளுக்கு இந்த உணவு நிகழ்ச்சியைக் கொண்டு செல்வதற்கு திட்டமிட்டிருப்பதாக துணைப் பிரதமர் தெரிவித்துள்ளார்.



# தீய எண்ணத்துடன் கியூபெக் செயற்படுவதாகக் குற்றச்சாட்டு

## மூன்று பூர்வீகக் குடி சமுதாயத்தினர் சுமத்துகின்றனர்

கியூபெக்,ஏப்ரல்02

கியூபெக் மாகாணம் தீய எண்ணத்துடன் செயற்படுவதாக மூன்று பூர்வீகக் குடி சமுதாயத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எஸ்ஸிபிட், பெக்குஹாகமியுல் நுஹாட்ஸ் மற்றும் நுட்டாஸ்குஹான் பூர்வீகக் குடிகளின் தலைவர்களே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

பெட்டபேன் உடன்படிக்கையை 2023ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி முன்னர் நிறைவு செய்வதாக உறுதியளித்திருந்த போதிலும், அதனை நிறைவேற்றாது புதிய இறுதித் திகதியை அறிவித்துள்ளதுடன், மேலும் பல புதிய தகவல்களை கோரியுள்ளதாகவும் இந்தத் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பெட்டபேன் உடன்படிக்கையானது கடந்த நாற்பது வருடங்களாக பூர்வீகக் குடியினருக்கும், கியூபெக் அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 12,000 பூர்வீகக் குடியினரை பிரதிநிதித்துவம் செய்யும் இந்தத் தலைவர்கள், கியூபெக் மாகாண முதல்வருடன் அவசர கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளமைய்டன், மறுக்கும் பட்சத்தில் சட்ட நடவடிக்கையை கோர நேரிடும் என எச்சரித்துள்ளனர்.

இந்த உடன்படிக்கை தொடர்பில் மத்திய அரசாங்கத்துடன் பூர்வீகக் குடியினர் ஏற்கனவே இணக்கத்தை எட்டியுள்ள நிலையில், கியூபெக் அரசாங்கம் இதனைத் தாமதப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விரைவில் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளதாகவும், அது குறித்து பகிரங்கமாக கருத்து தெரிவிக்க முடியாது எனவும் கியூபெக் மாகாண முதல்வரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# பெனாய்ட் பெல்லெட்டியர் மறைவு



முன்னாள் கியூபெக் லிபரல் அமைச்சரவை அமைச்சரும், நன்கு அறியப்பட்ட அரசமைப்பு நிபுணருமான பெனாய்ட் பெல்லெட்டியர் தனது 64 வயதில் மெக்சிகோவில் காலமானார் என அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

அவரது மனைவி மற்றும் நான்கு குழந்தைகள் அவரை ‘ஒரு அக்கறையுள்ள கணவர், அர்ப்பணிப்பு, வேடிக்கையான, லிபரல் தந்தை மற்றும் கியூபெக் மற்றும் பிரெஞ்சு மொழியின் சிறந்த காதலன்’ என்று விவரித்துள்ளனர்.

பெல்லெட்டியர் முன்னாள் பிரதமர் ஜீன் சாரெஸ்டின் அரசாங்கத்தில் அமைச்சராக பணியாற்றினார்.

2003 மற்றும் 2008இற்கு இடையில் பல பதவிகளை வகித்தார்.

இதில் அரசுகளுக்கிடையேயான விவகாரங்கள், பூர்வீக விவகாரங்கள், கனடிய பிரெஞ்சு-ஆங்கில மொழி பேசுபவர்கள், ஜனநாயக நிறுவனங்களின் சீர்திருத்தம் மற்றும் தகவல் அணுகல் ஆகியவை அடங்கும்.



# கனேடிய எம்.பிக்களின் சம்பளம் உயருகின்றது

ஒன்ராரியோ,ஏப்ரல்02

திங்கட்கிழமை, ஏப்ரல் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் சம்பள உயர்வின் காரணமான கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது வருடத்திற்கு 200,000 டொலர்கள் மேலதிகமாக பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற செயலாளர்கள், சபாநாயகர், பிரதமர் போன்ற சிறப்பு அலுவலகங்களுக்கும் கூடுதல் சம்பள உயர்வு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் சம்பளம் இப்போது வருடத்திற்கு 400,000 டொலர்களால் உயர்ந்துள்ளது.

அரசியல்வாதிகளின் ஊதியத்தை நிர்வகிக்கும் சட்டத்தில் எழுதப்பட்ட வருடாந்த அதிகரிப்பு காரணமாக அனைத்து வகை நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பள உயர்வைப் பெறுவார்கள்.

நாடாளுமன்றத்தின் கூற்றுப்படி, ஒவ்வொரு ஆண்டும் அதிகரிப்பின் துல்லியமான எண்ணிக்கை தனியார் துறையில் குடியேற்றங்களின் அதிகரிப்புகளின் குறியீட்டைக் கண்காணிப்பதில் இருந்து வருகிறது.

இந்த ஆண்டு அதிகரிப்பானது, 4.4 சதவீதமாக உள்ளது. அதாவது பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலையான சம்பளம் 8,500 டொலர்கள் அதிகரிக்கவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருக்கான சம்பளம் 299,900 டொலர்களாகவும், அமைச்சரவை அமைச்சர்கள் 300,000 டொலர்கள் வரையும் பெறுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.





# அல்பேர்ட்டாவில் இவ்வருடம் 57 காட்டுத் தீச் சம்பவங்கள்!

அல்பேர்ட்டா,ஏப்ரல்02

அல்பேர்ட்டாவில் இந்த வருடத்தில் இதுவரை 57 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப் படுகின்றது.

வழமையாக மார்ச் முதலாம் திகதி முதல் ஒக்டோபர் 31ஆம் திகதி வரை அல்பேர்ட்டா மாகாணத்தில் காட்டுத் தீ ஏற்படக் கூடிய நாள்களாக எதிர்வு கூறப்பட்டிருக்கின்றது.

எவ்வாறாயினும், இந்த வருடம் வழமைக்கு மாறாக பெப்ரவரி மாதம் 20ஆம் திகதியே காட்டுத் தீக்கு தயாராவதற்கான நடவடிக்கைகளை மாகாண அரசாங்கம் எடுத்திருந்தது.

இந்த நிலையில் மார்ச் மாதம் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில் 2023ஆம் ஆண்டு முதல் நீடித்த 50 காட்டுத் தீயுடன், 57 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த காட்டுத் தீவு சம்பவங்களில் ஒன்றான, ஸ்லேவ் லேக் பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயான ‘கட்டுப் படுத்த முடியாதது’ என அறிவிக்கப் பட்டுள்ளதுடன், ஏப்ரல் 1 வரையான காலப்பகுதிக்குள் 54 ஹெக்டேயர் நிலப்பரப்பு தீக்குள்ளாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிக வெப்பநிலை மற்றும் வேகமான காற்றின் காரணமாக காட்டுத் தீ ஏற்படக் கூடிய அதிக ஆபத்துள்ள பிராந்தியமாக ஸ்லேவ் லேக் பகுதி காணப்படுகின்றது.

# மார்க்கத்தில் வீட்டில் தீ; 60 வயதுடையவர் சாவு!

ஒன்ராரியோ,ஏப்ரல்02

திங்கட்கிழமை மதியம் மார்க்கம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் இறந்துவிட்டார் என மார்க்கம் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் பிரிவு கூறுகின்றது.

ஸ்டீல்ஸ் அவென்யூ கிழக்கிற்கு வடக்கே 7355 ரீசல் வீதியில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

சம்பவ இடத்தில் இருந்து பேசிய துணை தீயணைப்புத் தலைவர் மேத்யூ கீ, அவர்கள் மாலை 3 மணிக்குப் பிறகு அந்த பகுதிக்கு தாங்க அழைக்கப்பட்ட னர் எனக் கூறினார். உயிரிழந்தவரை சரியாக அடையா ளம் காணும் விடயம் தற்போது விசார ணையில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

# யோர்க் பிராந்தியத்தில் விபத்தில் ஒருவர் மரணம்

ஒன்ராரியோ,ஏப்ரல்02

ஏப்ரல் முதலாம் திகதி திங்கட்கிழமை மதியம் யோர்க் பிராந்தியத்தில் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிற்பகல் 2 மணிக்குப் பிறகு கிங்கின் 17 ஆவது பக்க சாலை மற்றும் கிங் ஹில்ஸ் லேன் அருகே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. யோர்க் பிராந்திய பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

